# 10.ஆம் வகுப்பு-தமிழ்-பணித்தாள் 2 (இயல்-2)

பின்வரும் பாடலைப்படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளி

நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர் செல நிமிர்ந்த மாஅல் போல
பாடு இமிழ் பனிக் கடல் பருகி வலன் ஏர்பு
கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
அருங் கடி மூதூர் மருங்கில் போகி

1) மேற்கண்ட பாடல் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?

அ.முல்லைப்பாட்டு ஆ.குறுந்தொகை இ.பரிபாடல் ஈ.கலித்தொகை

2)மேற்கண்ட பாடல் எந்த தொகுப்பில் இடம்பெற்றுள்ளது?

அ.எட்டுத்தொகை ஆ.பத்துப்பாட்டு இ.நீதி நூல்கள் ஈ.பதினெண் கீழ்க்கணக்கு

3) இப்பாடலை இயற்றியவர் யார்?

அ.கபிலர் ஆ.பரணர் இ.நப்பூதனார் ஈ.கீரந்தையார்

4)நேமி என்பதன் பொருள்

அ.திருமால் ஆ.சங்கு இ.சக்கரம் ஈ.மழை

5)தடக்கை–இலக்கணக் குறிப்பு

அ.உரிச்சொல் தொடர் ஆ.பண்புத்தொகை இ.வினைத்தொகை ஈ.விளித்தொடர்

6)கொடுஞ்செலவு–பிரித்து எழுதுக

அ.கொடும்+செலவு ஆ.கொடுமை+செலவு இ.கொடு+செலவு ஈ.கொடுஞ்+செலவு

7)பண்புத்தொகையைத் தேர்ந்தெடுக்க

அ.மாஅல் ஆ.வளைஇ இ.வீ முல்லை ஈ.மூதூர்

8)எதுகை நயத்தைத் தேர்ந்தெடுக்க

அ.பெரும்பெயல், பொழிந்த ஆ.செல,போல இ. பெரும்பெயல்,அருங்கடி ஈ.நாழி,நறுவீ

9) பாடலில் வரும் மோனை நயம்

அ.பெரும்பெயல்,பொழிந்த ஆ.செல,போல இ.பெரும்பெயல்,அருங்கடி ஈ.நாழி,நறுவீ

10)இப்பாடல் யார் யாரிடம் கூறியது?

அ.தலைவி,முதுபெண்டிரிடம் ஆ.முதுபெண்டிர்,தலைவியிடம்

இ.முதுபெண்டிர்,கன்றிடம் ஈ.ஆய்மகள், கன்றிடம்

LIVEWORKSHEETS